## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S.No.113/2021

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 24.02.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவானந்தம் | ஜாதி | : | |
| த/பெயர் | : | கணேசன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா.1 முன்னிலை 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. என் அப்பா எந்த வருடம் 1ம் பிரதிவாதியான எனது தம்பி சண்முகத்திற்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் கடந்த 19.06.2009-ல் எழுதி வைத்ததாக சொன்னார்கள்.மேற்கண்ட் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தற்கு மறுநாள் 21.06.2009 ல் எனது அப்பா இறந்துவிட்டார். எனது அப்பாவை மருத்துவமனைக்கு தூக்கி கொண்டு செல்வதாக என் சகோதரி சொன்னார். ஆனால் அதற்கு பிறகு தான் எனது சகோதரியும், எனது மனைவியும் என் அப்பாவை தூக்கி கொண்டு பத்திர பதிவு அலுவலகத்தில் சென்று செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்த விவரத்தை சொன்னார்கள். 1ம் பிரதிவாதி என் அப்பாவை கட்டாயப்படுத்தி தூக்கிக்கொண்டு போய் பத்திர பதிவு செய்தது குறித்து செட்டில்மெண்ட் செய்த அன்றையதினம் செய்தது தெரியாது. அதற்கு பிறகு தான் எங்களுக்கு தெரியவந்தது.

2. எனது தந்தையாரை 1ம் பிரதிவாதி கட்டாயப்படுத்தி தான் பத்திர பதிவு அலுவலகத்திற்கு தூக்கி சென்றார் என்பது குறித்து யாருக்கு நேரிடையாக தெரியும் என்றால் நான் நேரிடையாக பார்க்கவில்லை. எனது மனைவியும், என் சகோதரியும் 1ம் பிரதிவாதி என் அப்பாவை தூக்கி சென்றதை நேரிடையாக பார்த்தார்கள். என்

தகப்பனார் யாருடைய பாதுகாப்பில் இருந்தார் என்றால் எனது சகோதரியும், என் மனைவியும் பார்த்துக்கொண்டார்கள். எனக்கு 1ம் பிரதிவாதிக்கும் சகோதரிக்கும் இடையே நல்ல பேச்சு வார்த்தை இருந்தது என்றால் இருந்தது. கடந்த 2019 ஆம் வருடம் என் தாயார் இறந்துவிட்டார்.1ம் பிரதிவாதி என் அப்பாவை மருத்துவமனைக்கு அழைத்து செல்லதாக என் மனைவியுடமும், என் சகோதரியிடம் அழைத்து செல்வதாக சொல்லியுள்ளார். அதன் பிறகு தான் எங்களுக்கு தெரியும்.

3. எங்களுக்கு தெரியாமல் 1ம் பிரதிவாதியான என் தம்பி என் அப்பாவை பத்திர பதிவு அலுவலகத்திற்கு அழைத்து சென்று செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்பது தான் எங்களது கட்சி என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் என் அப்பாவிற்கு சொந்தமான சொத்துக்கள் என்பதை பொறுத்து எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் தாவா சொத்துக்கள் என் தகப்பனாரின் அம்மா பேரில் இருந்தது. என்தகப்பனார் ஒரே வாரிசு என்பதால் அவருடைய சொத்துக்கள் அனைத்தும் என் தகப்பனாருக்கு கிடைக்கப்பெற்றதாகும். தாவா சொத்து என் தகப்பனாரின் பூர்வீக சொத்து ஆகும்.

4. என் அப்பா பூர்வீக சொத்துக்கள் தொடர்பாக எனக்கு தனியாக சொத்துக்கள் குறித்து ஏதேனும் ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்தாரா என்றால் இல்லை. கடந்த 2007 டிசம்பர் மாதத்தில் என் அப்பா பூர்வீக சொத்துக்கள் தொடர்பாக ஒரு உயில் ஆவணத்தை ஏற்படுத்தினார். அதில் நானும், என் சகோதர சகோதரிகளும் கையெழுத்து செய்துள்ளோம். 1ம் பிரதிவாதி அதில் கடைசிவரை கையொப்பம் செய்யவில்லை. அதன்பிறகு தான் கடந்த 2009-ல் செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார். என்னால் உயில் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உயில் ஆவணம் குறித்து எப்போது நான் தெரிந்துக்கொண்டேன் என்றால் கடந்த 2007 ல் வருடம் உயில் ஆவணத்ததில் கையொப்பம் செய்ய சொல்லி என்னிடம் காண்பித்தார். அப்போது எனக்கு தெரியும். பிறகு உயில் ஆவணத்தை வாங்கிக்கொண்டார்.

5. உயில் ஆவணம் எங்கு வாங்கப்பட்டது என்பது குறித்து தெரியுமா என்றால் தெரியும். என் அப்பா உயில் ஆவணத்தில் வழக்கு சொத்துக்கள் என்

தகப்பானாருக்கு சொந்தமான சொத்துக்கள் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் பெற்றோருக்கு ஒரே வாரிசு என்பதால் அவருடைய சொத்து என்று சொன்னால் சரிதான். உயில் ஆவணம் எத்தனை பக்கங்களை கொண்டது என்றால் 2 பக்கங்களை கொண்டது. உயில் ஆவணத்தின் 2 வது பக்கத்தில் என் அப்பா கையொப்பம் செய்தார். அதன் பிறகு நாங்கள் அனைவரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளோம். என் தகப்பனார் உயில் ஆவணத்தை ஏன் பதிவு செய்யவில்லை என்றால் உயில் ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை பதிவு செய்வதில் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் அப்போது உயில் ஆவணத்தை பதிவு செய்துக்கொள்ளலாம் என அப்பா சொன்னார்.

6. மன்னார்குடி 3 ம் தெருவிலுள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் தான் உயில் ஆவணம் எழுதப்பட்டது. அப்போது யார், யார் இருந்தார்கள் என்றால் என் அம்மா, நான், என் தம்பி முருகன், என் தங்கை ஆகியோர்கள் இருந்தோம். அதில் நாங்கள் அனைவரும் கையொப்பம் செய்தோம். 1-ம் பிரதிவாதி மட்டும் கையொப்பம் செய்யவும் இல்லை. அவர் வரவும் இல்லை. மேற்கண்ட நபர்களை தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சி கையொப்பம் செய்த கோபாலகிருஷ்ணன் மற்றும் குணசேகரன் ஆகியோர்கள் உடன் இருந்தார்கள். மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பத்திரம் வாங்கவில்லை என்றால் என் அப்பா ஏற்கனவே உயில் ஆவணத்தை தயார் செய்துவிட்டார். என் அப்பா எப்போது உயில் ஆவணத்தை தயார் செய்தார் என்றால் டிசம்பர் 25-26 தேதியில் தயார் செய்து இருக்கலாம். உயில் ஆவணம் தயார் செய்த மறுநாள் மன்னார்குடிக்கு என் அப்பா 26 டிசம்பர் மாதம் 2007 ஆண்டு வந்துவிட்டார். உயில் ஆவணத்தில் கையொப்பம் செய்தவற்கு நான் காலை நேரத்தில் வந்துவிட்டேன். 11 மணிக்கு என் அப்பா பதிவு செய்ய கொடுத்தார். என் அப்பா தாவா சொத்துக்கள் தவிர வேறு ஏதேனும் சொத்துக்கள் மன்னார்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ளாரா என்றால் எங்களுக்குள்ள பாக சொத்துக்களை எங்களுக்கு பதிவு செய்து கொடுத்து சில சொத்துக்களை அவரது பெயரிலேயே வைத்துக்கொண்டார். நான் ஒரே ஒரு முறை தான் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தேன்

என்றாலும், வேறு தேதிகளில் நான் வரவில்லை என்றாலும் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் கடந்த 2021 ஆம் வருடம் பத்திர பதிவு செய்யக்கூடாது என மனு கொடுப்பதற்காக மன்னார்குடி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தேன்.

7. உயில் ஆவணம் என் அப்பா வாங்கியது தொடர்பாக எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தில் கையொப்பம் செய்யும்போது தெரிந்துக்கொண்டேன். உயில் ஆவணத்தில் நான் கையொப்பம் செய்து வருடங்கள் ஆகிவிட்டது. அதனால் எத்தனை ரூபாய் பத்திரம் என்று சரியாக ஞாபகமில்லை. (சாட்சி மீண்டும் 20/- பத்திரம் என சொல்கிறார்.) உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த சாட்சிகள் உயில் ஆவணத்தை தவிர வேறு எந்த ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். உயில் ஆவணம் ஏற்பட்டது குறித்து 2007-ல் எனக்கு தெரிந்தற்கு பிறகு ஏன் பட்டா மாற்றம் செய்யவில்லை என்றால் எனது பெயரில் பெயரிலும், என் சகோதர சகோதரிக்கு எற்படுத்திக்கொடுத்த சொத்துக்களை பொறுத்து பட்டா மாற்றம் செய்துள்ளோம். என் அப்பா பெயரிலுள்ள சில சொத்துக்களை பொறுத்து பட்டா பெற இயலவில்லை. என் அப்பா பெயரிலுள்ள சில சொத்துக்களை பொறுத்து என் சகோதரரான 1ம் பிரதிவாதி செட்டில்மெண்ட் ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் சரியல்ல.(உயில் ஆவணத்தில் 1 ம் பிரதிவாதிக்கு எந்த சொத்து ஒதுக்கப்பட்டது என்ற கேள்வியை 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் சாட்சியிடம் கேட்டபோது சாட்சி உயில் ஆவணத்தில் கையொப்பம் செய்ய வரவில்லை என்று கூறியதை பதிவு செய்வதற்கு முன்னதாக வாதி தரப்பு வழக்கறிஞர் 1ம் பிரதிவாதி பத்திர பதிவு அலுவலகத்திற்கு வரவில்லை என்று கூறியவுடன் **1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வாதி தரப்பு வழக்கறிஞரை** "**Sir என்று குறிப்பிட்டு 1ம் பிரதிவாதி பத்திர பதிவு அலுவலகத்திற்கு வரவில்லை என்று சொல்கிறார் என பதிவு செய்துக்கொள்ளும்படி என்னிடம் கூறினார். மேலும், நீதிமன்றம் ஒருதலைபட்சமாக நடந்து கொள்ள தயாராக இருப்பதாக கூறி திறந்த நீதிமன்றத்தில் அனைத்து வழக்கறிஞர்கள் முன்னிலையிலும், பொதுமக்கள் முன்னிலையிலும் தெரிவித்தார்.**")

(மேலும் 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேறு கேள்விகள் கேட்க விருப்பம் இல்லை என்று சொன்னதன் காரணத்தினால் வா.சா.1னின் குறுக்கு விசாரணை இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.02.24 18:12:02 +0530

District Munsif

Mannargudi.